**இம்புள்பே பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் இம்புள்பே பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி திகதியில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உற்படுத்தப்பட்டுள்ள சபைக்கு சொந்தமான 22 காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மதிப்பிட்டு கணக்குப் பதிவிட வேண்டும். | சொத்துக்கள் பதிவேட்டில் உற்படுத்தப்பட்டுள்ள சபைக்கு சொந்தமான காணிகளிற்குரிய தளக்கோல வரிபடத்தை தயார் செய்து மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக மதிப்பீட்டறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் இருப்பு பதிவேட்டின் பிரகாரம் 5 இருப்பு வகைகளின் பெறுமதியான ரூபா 75,145 கூடுதலாக மற்றும் 19 இருப்பு வகைகளின் பெறுமதியான ரூபா 30,628 குறைத்தும் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 2, 3 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் சபையின் கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையத்தை நிர்மானிப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட ரூபா 1,858,720 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | நிர்மானக் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 10 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் 03 செலுத்த வேண்டிய கணக்குகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 16,736 கணக்கிடப்பட்டிருக்காததுடன் மாகாண சபையிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 989,262 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | பெறுவனவுகள் மற்றும் கொடுக்பனவுகளை சரியாக இனங்கண்டு கணக்கிட வேண்டும் | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 12 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (உ) | 2016 ஆண்டின் போது ரூபா 119,046 ஆன மின்சார கட்டணம் முற்பணமாக கணக்கு பதிவிடப்பட்டதனை சீர்செய்வதற்காக மீளாய்வாண்டில் முற்பண கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 19 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2017 ஆண்டின் போது நிர்மான வேலை ஒன்றிற்காக செலுத்தப்பட்ட ரூபா 329,363 இனை முற்பணமாக கணக்கு பதிவிடப்பட்டதனை மீளாய்வாண்டில் சீர் செய்வதற்காக முற்பண கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 20 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (எ) | 2017 ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமை கருத்திட்டத்திற்கு கிடைத்த வைப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 560,300 ஆன மூலதன ஏற்பாடு மீளாய்வாண்டிலும் கூட வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 21 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | 2016 ஆண்டின் போது முத்திரைக் கட்டண அட்டவணை தயாரிப்பதற்காக நீதிமன்ற ஆளணியினருக்கு செலுத்த வேண்டிய ஆளணி படிகள் ரூபா 115,900 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டில் ஜர்னல் குறிப்பு 16 இனூடாக சீர்செய்யப்பட்டுள்ளது. |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் நானாவித வைப்பு பதிவேட்டில் பேரேட்டு மீதிகள் மற்றும் நானாவித வைப்பு கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள் இடையில் ரூபா 7,671,047 ஆன வேறுபாடு | இனங்காமையினை இனங்கண்டு சரியாக சீராக்கப்பட வேண்டும் | வைப்பு பதிவேட்டிற்கமைய 2018 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 110,436 பெறுமதியான வைப்பு பணத்தை எதிர் காலத்தில் ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

நிலவியது.

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் முற்பண பதிவேட்டில் தீர்க்கப்படாத மீதிகள் மற்றும் முற்பண கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளிற்கிடையில் ரூபா 3,427,173 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இனங்காமையினை இனங்கண்டு சரியாக சீராக்கப்பட வேண்டும் | தீர்க்கப்படாத முற்பண தொகைகளை எதிர் காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதியில் கடன்படுனர் பதிவேட்டின் பேரேட்டு மீதிகள் மற்றும் கடன்படுனர் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளிற்கிடையில் ரூபா 3,308,666 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இனங்காமையினை இனங்கண்டு சரியாக சீராக்கப்பட வேண்டும் | பேரேட்டு மீதி பட்டியலின் கூட்டுத் தொகை ரூபா 5,905,056 ஆன துடன் கடன்படுனர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 9,213,722 ஆனதில் கணக்கு வைத்தலின் போது கடன்படுனர் ஒதுக்கீட்டிற்குப் பதிலாக கிடைத்த பணம் கடன்படுனர்களுக்கு செலவு வைக்கப்படாததனால் ரூபா 3,308,666 ஆன வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அது ஜர்னல் குறிப்பு 23 இனூடாக 2019 ஆண்டில் சீர்செய்யப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனா ன தொடர்பு** | **இணங்காமை** | **பெறுமதி ரூபா** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| (அ) | 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டம் | | | | |
| (i) | 24 (1) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | சபைக்கு உரித்தான பாதைகளை வர்த்தமானிப்படுத்த அல்லது அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள 2003 ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற் கமைய செயற்பட வேண்டும் | பெருமளவு கிராம பாதைகள் வர்த்தமானிப்படுத்தப்பட இருப்பதுடன் அப்பாதைகளை நிள அளவை திட்டம் ஒன்றுடன் செய்ய வேண்டியமையால் எதிர்காலத்தில் அதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வதாக வினயமாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தெரிவிக்கிறேன். |
| (ii) | 126 (iv) (ஈ) பிரிவு | சபை அதிகார எல்லையிலுள்ள அறிவித்தல் பலகைகள் தொடர்பாக துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு கட்டணம் அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற் கமைய செயற்பட வேண்டும் | அறிவித்தல் பலகைகள் தொடர்பாக துணைச் சட்டம் தயாரிக்கப்பட்டு சபை அங்கீகாரத்தை பெற்று முன்னடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (iii) | 134 பிரிவு | 2015 ஆண்டில் அபிவிருத்தி கிராமம் என இனங்காணப்பட்ட 06 கிராம பிரதேசங்களிலிருந்து 2019 மார்ச் வரை வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற் கமைய செயற்பட வேண்டும் | இந்தப் பிரதேசங்களை உள்ளடக்கிய கூகல் வரிபடமுடனான விபரத்தினை பெற்று குறித்த பிரதேசங்களில் சொத்து மதிப்தீடொன்று எதிர்காலத்தில் நடாத்தப்படும். |
| (iv) | 149 பிரிவு | இலங்கை சுற்றுலாத் துறை சபையில் பதியப்பட்ட ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிட பெறவனவு மீது அறவிட வேண்டிய 1% வரி அவ்வாறான 06 நிறுவனங்களில் இருந்து 17 வருடங்களாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற் கமைய செயற்பட வேண்டும் | ஏதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(1)(5) | 2018 ஆண்டு விபத்திற்குள்ளான சபையின் கெப் வண்டி ரூபா 1,950,302 செலவில் 2019 ஆண்டு பழுதுபார்க்கப்பட்ட போதும், அதற்கு பொருப்பான தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2,150,676 | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நி.பி 104(3) கீழ் நட்டம் தொடர்பான ஆரம்ப அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆதன் படி உள்ளூராட்சி ஆணையாளரினால் விசாரணை குழு ஒன்று நியமிக்கபபட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(5) | 2002 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை வினியோகிக்கப்பட்டிருந்த 105 உப கட்டுநிதிகள் 2019 மார்ச் வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 4,754,297 | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தீர்க்கப்படாத முற்பணத்தை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571 | உரிமை கோரப்படாத காலாவதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு | 1,300,672 | நிதிப் பிரமாணம் பிரகாரம் | வைப்புப் பதிவேடு பிரகாரம் செலுத்த வேண்டிய வைப்புக்களின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | நடவடிக்கை எடுக்க வேண்டும் | பெறுமதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2012 சனவரி 05 ஆம் திகதிய 01/2012 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி | 02 ஒப்பந்கங்கள் தொடர்பாக சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளரின் இரண்டு பிரதிநிதிகள் உள்ளிட்ட மூவரைக் கொண்ட குழு ஒன்றின் மூலம் சமுதாய அடிப்படை சங்கங்களின் ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்திருக்கவில்லை. | 2,379,220 | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | மகா சபை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார எல்லையில் பதியப்பட்ட சமுதாய அடிப்படை சங்கங்களின் இயலுமையினை பரிசோதித்து 20 இலட்சத்திற்கு குறைந்த வேலைகளுக்காக பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்படும் இயலுமை சான்றிதழின் மீதி வேலைகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 இலக்க சொத்துக்கள் முகாமை சுற்றறிக்கை | 2018 ஆண்டு முதல் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட கெப் வண்டியை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | - | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | குறித்த வண்டியின் பதிவு சான்றிதழை பெற்றுக் கொண்டவுடன் தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,086,825 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,520,417 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 5,723,099 | 7,180,672 | 5,325,824 | 1,854,848 | 5,184,659 | 4,081,871 | 6,482,921 | 3,881,128 |
| (ii) | வாடகை | 882,000 | 1,610,615 | 1,610,615 | - | 308,120 | 312,120 | 312,120 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 655,000 | 662,500 | 670,065 | - | 450,000 | 450,000 | 483,396 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,710,500 | 3,126,131 | 1,759,397 | 1,366,734 | 1,030,000 | 819,390 | - | 1,309,715 |
| | **கூட்டுத் தொகை** | **23,970,599** | **12,579,918** | **9,365,901** | **3,221,582** | **6,972.779** | **5,663,381** | **7,278,437** | **5,190,843** |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்ட வீத வரி மற்றும் குத்தகை வருமானம் ரூபா 1,157,097 இனால் குறைந்திருந்தது. | சபையின் வருமானத்தை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | வீத வரிக்காக 2019 ஆண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 143,740 தொகை அதாவது 51 சதவீத தொகை ஒன்றை 2019 ஏப்ரல் 30 திகதியளவில் அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) முன்னைய ஆண்டு நிலுவை வீத வரி மற்றும் குத்தகை மீதிகளிலிருந்து மேலும் நிலுவையாக காணப்படும் ரூபா 3,398,759 இனை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருமானத்தை உரிய முறையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னைய ஆண்டு நிலுவை வீத வரி தொகையிலிருந்து 19 சதவீதம் அதாவது ரூபா 28,899 ஆன பணமொன்று 2019 ஏப்ரல் 30 திகதியன்று அறவிடப்பட்டுள்ளதுடன் மீதி நிலுவை பணத்தை அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |
| (இ) 2008 ஆண்டு முதல் நிலவி வரும் நிலுவை நீர் கட்டணம் ரூபா 802,142 இனை 2019 ஏப்ரல் வரையும் அறவிட முடியாமல் இருந்தது. | வருமானத்தை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் எவ்வித பில்லிடலும் செய்யப்படாத எனினும் ஒவ்வொறு வருடமும் மீதிகள் முன்கொண்டு செல்லப்படும் துண்டிக்கப்பட்ட அறவீடு நின்றுள்ள நிலுவை பணம் தொடர்பாக 2019 ஏப்ரல் மகா சபைக்கு சமர்பிக்கப்பட்டதுடன் அந்நிலுவையை அறவிடுவது தொடர்பாக தற்போதும் முன் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் நிலுவை குப்பைக் கட்டணம் ரூபா 229,550 இனை 2019 ஏப்ரல் வரையும் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டு திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை கட்டணத்தின் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. நடமாடும் சேவை நடாத்தப்பட்டு நிலுவை பணத்தை அறவிட நடவடிகை எடுக்கப்பட்டுளளதுடன், குப்பை கட்டணம் நிலுவையாக உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து குப்பைகளை பெறுவதனை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய 30 விடயங்கள் தொடர்பாக துணைச் சட்டம் விதிக்க 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான துணைச் சட்டங்களை இயற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டிட வரிபடம் அங்கீகரித்தலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விளம்பரப் பலகை கட்டணம் அறவிடலை ஒழுங்குபடுத்தலிற்காக இரண்டு துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் முன் ஏற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றது. எதிர் காலத்தில் ஏனைய துணைச்சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| | | |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ரூபா 10,723,047 உதவியை செலவிட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த கழிவு பொருள் முகாமை மத்திய நிலையம் தற்போதைய காலநிலை பொருந்தாததன் காரணமாக இயற்கை பசளை உற்பத்தி பிரச்சினைக்குரியதாக இருந்தது. அதன் படி மீள்சுளற்சிக்கு உடபடுத்த முடியுமான கழிவுப் பொருட்களிலிருந்து மீள்சுளற்சிக்கு உடபடுத்த முடியாத கழிவுப் பொருட்களை வேறாக்கி சூழலிற்கு மாசு ஏற்படாத விதத்தில் வெளியேற்ற முறைமையொன்று மற்றும் இயற்கை பசளை உற்பத்தி செய்யும் முறைமையொன்றும் 2019 மார்ச் வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற் கொண்டு கருத்திட்டத்தை திட்டமிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் காலநிலைக்கு உகந்த வகையில் குப்பை கொட்டிலை நவீன மயமாக்கி பயன் பெறக்கூடிய நிலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிலிசரு கருத்திட்ட நிதி உதவி மூலம் நிர்மானிக்கப்பட்ட இக் கழிவுப் பொருள் முகாமை நிலையத்தின் வடிவமைப்பு தற்போதைய காலநிலைக்கு பொருந்தாததன் காரணமாக இயற்கை பசளை உற்பத்தி பிரச்சினைக்குரியதாக இருந்தது. கொம்போஸ்ட் இந் நிலையத்தின் நடைமுறை சிக்கல்களுக்கு மத்தியில் 2017 மே மாதம் முதற்தட்டு உருவாக்கம் செய்யப்பட்ட போதும் படிப்படியாக தற்போதைய உயர் காலநிலையை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக தோல்வியுற்றுள்ளது. தற்போது இக் குறைபாட்டினை போக்கிக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும், தமது விடய பரப்பிற்கு அமைய அடைந்து கொள்ளக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், அதனுடன் தொடர்பான இலக்குகள், பயன்பாட்டு தரவுகள், இலக்கு சென்றடைய வேண்டிய இடங்கள் மேலும் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய அளவுகோள்களை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நீண்ட கால திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2030 ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்கு இணங்க நடவடிக்கை மேற் கொள்ள தேவையான செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார எல்லையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த 70 நிலையான | வர்த்தமாணி அறிவித்தல் | பிரதேசத்தில் அறிவித்தல் பலகை கட்டணம் |

| | | |
|---|---|---|
| விளம்பரப் பலகைகளிலிருந்து மற்றும் மதில்களின் மீது அல்லது சுவர்களின் மீது விளம்பரப்படுத்தப்படும் 06 அறிவித்தல் பலகைகளின் வர்த்தமாணி அறிவித்தல் பிரகாரம் கட்டணம் அறவிடப்படாததன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 115,281 ஆன வருமானம் சபைக்கு கிடைக்காதிருந்தது. அவ்வாறே கட்டணம் அறவிட முடியுமான அறிவித்தல் பலகைகளை இனங்கண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்தாத நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டுள்ளன. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமாக இருந்த செயலாளர் பதவியின் பதில் கடமைக்காக பொது முகாமை தரம் 1 அலுவளர் ஒருவரை 2014 ஆண்டு மே மாதம் முதல் உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார். | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | மூன்றாம் நிலை சேவை மட்ட பொது முகாமை உதவியாளர் சிரேஷ்ட நிலை செயலாளர் பதவி 2008 முதல் வெற்றிடமாக இருக்கின்றது. அப்பதவியிற்கான நியமனம் பொது சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படுவதுடன் அவ் வெற்றிடம் தொடர்பாக ஒவ்வொறு காலாண்டும் உள்ளூராட்சி திணைக்களம் அறிபூட்டப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக பிரதான செயலாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுளளது. |
| (ஆ) | நூலகப்பொருப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் பாவிகளின் வெற்றிடம் மற்றும் ஆயுரவேத மருந்தக இணைப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை மேற் கொள்ளாமையினால் குறித்த வேலை மற்றும் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும பயன்மிக்கதாகவும் நிறைவேற்ற முடியாதல் இருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | நூலகப்பொருப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் பாவிகளின் வெற்றிடம் மற்றும் ஆயுரவேத மருந்தக இணைப்பாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் பில்லிட முடியுமான வருமானத்தை மதிப்பிட்ட பின்னர் வருமான மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக முன்னைய மூன்று ஆண்டுகளிற்காக நீர் கட்டண | பில்லிட முடியுமான வருமானம் தொடர்பான ஆய்வொன்றை மேற் கொண்டு சாத்தியப்பாடான நீர் | ஏதிர் காலத்தில் நீர் கட்டண வருமானத்தை மதிப்பிட்டு சரியாக மதிப்பிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| குறைமதிப்பீடு ரூபா 3,556,862 ஆனது. | கட்டண வருமானத்தை மதிப்பிட வேண்டும். | |

**3.5 சொத்துக்கள் முகாமை**

**3.5.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 122,802,008 பெறுமதியான 4 கணக்கு விடயங்களிற்குரிய சொத்து உபகரணங்கள் மற்றும் உபகரணங்களிற்காக நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான துணைப்பதிவேடு நாலாவதுவரையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையான தகவல்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும். | ஏதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 3,410,000 பெறுமதியான சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசரை கழிவுப் பொருட்களை வெளியேற்ற இடம் ஒன்று இல்லாத காரணத்தால் மற்றும் 03 இயந்திர உபதரணங்களை 2014 ஆண்டு பழுதுபார்க்க ஒப்படைத்து மீண்டும் கையேற்க நடவடிக்கை எடுக்காததனால் விலைவற்று நிலவின. | சொத்துக்களை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான தளர்த்தும் உருளையை மற்றும் பிளேக்கம்பெக்டர் இயந்திரத்தை பழுதுபார்தலின் பின்னர் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தேன். கழிவகற்றும் பவுசரை பயன்படுத்தக் கூடிய உள்ளுராட்சி நிறுவனமொன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுத்தேன். |
| (ஆ) புர எழுச்சி கருத்திட்டத்தினால் நிர்மானிக்கப்பட்டு 2016 ஆண்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 42,000,000 கிரயமுடைய களகம பலநோக்கு கட்டிடத்தில் ஆயர்வேத கிளினிக் ஒன்று மற்றும் சபையின் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதும் சமயலறை ஒன்று இல்லாத காரணத்தால் குறித்த கர்மங்களுக்கு பயன்படுத்த | கட்டிடத்தை பயனுள்ள விதத்தில் பிரயோசனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | களகம பலநோக்கு கட்டிடத்தில் மாதம் ஒரு ஆயர்வேத கிளினிக் மற்றும் சபை ஒழுங்குபடுத்தும் நானாவித கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. இக் கட்டெத்தை சுற்றுலா துறையில் வருமானம் ஈட்டும் கருத்திட்டமொன்றில் ஈடுபடுத்த அத்தியவசியமான சமயலறை ஒன்றை நிர்மானிக்க கருத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சபரகமுவ மாகாண சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. |

முடியாதிருந்தது.

### 3.6 பெறுகை

#### 3.6.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2.1(அ) வழிகாட்டி பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 2,196,353 ஆன பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் எதிர்காலத்தில் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.6.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கெபொக்வத்த கழிவுப் பொருள் முகாமை வளவிலுள்ள கொன்கிரீட் பாதை மேற்பரப்பில் 11.55 வருக்க மீட்டர் பகுதியொன்ற உடைந்து பாதைக்கு வெளியே தள்ளப்பட்டு இருந்த போதும், ரூபா 83,652 ஆன தடுப்புப் பணத்தை பயன்படுத்தி பழுதுபார்க்க 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுக்கபபடவில்லை. | தடுப்புப் பணத்தை பயன்படுத்தியேனும் பாதையை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10% தடுப்புப் பணத்தினால் எதிர் காலத்தில் பாதை மேற்பரப்பில் உடைந்துள்ள பகுதியை பழுதுபார்ப்பதாக வினயமாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 40.55 மில்லியன் ஆன போதும் | பாதீட்டை நிதிக் கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்திக் கொள்ள போதி | பாதிடப்பட்ட மதிப்பீட்டினை விஞ்சி செலவு மேற் கொள்ள நேரிடும் சந்தர்ப்பத்தில் குறை நிரப்பு மதிப்பீடின் மூலம் சபை அங்கீகாரத்தை பெற்று |

| | | |
|---|---|---|
| அதன் உள்ளவாரான செலவு ரூபா 51.58 மில்லியன ஆனதில் ஏற்பாட்டை விஞ்சி ரூபா 11.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மூலதன செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 4.38 மில்லியன் ஆன போதும் அதன் உள்ளவாரான செலவு ரூபா 5.77 மில்லியன ஆனதில் ஏற்பாட்டை விஞ்சி ரூபா 1.38 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | கவனம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்குகளை இடைந்து கொள்ளவும் செயற்பட வேண்டும். | செலவுகளை மேற் கொள்ள உரிய பிரிவுகள் அறிவூட்டப்பட்டன. |

## 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பெலிஹுல்ஒய ‘‘திய பஹச’’ கிமன்ஹல வளவில் ஒப்பந்தக் காரரினால் சபை அங்கீகாரமின்றி 2014 ஆண்டு நிர்மானித்திருந்த கிமன்ஹல நிர்மானம் தொடர்பாக தவிசாளரின் ஆலோசணைக்கு அமைய 2015 ஆண்டு மதிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டு ரூபா 289,682 ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. சபை நிதியத்திற்கு சட்டரீதியற்ற இக் கொடுப்பனவிலிருந்து ரூபா 72,000 ஒப்பந்தக்காரரினால் மீள் செலுத்தப்பட்டிருந்த போதும் மீதி ரூபா 217,682 இனை அறவிட 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிர்மானம் தொடர்பாக பரிசீனைை செய்து அறிக்கை ஒன்றைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிககை எடுக்க வேண்டியமை. | நிர்மானங்களின் தற்போதைய நிலை தொடர்பாக பரிசீலனை செய்து அதன் கிரயத்தை மதிப்பிட்டு சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடப்பட்டு மீதி ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டது. கட்டிடம் தற்போது பயன்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக சபைக்கு நட்டம் ஏற்படவில்லை என வினயமாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பம்பஹின்ன வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் ரூபா 4,561,397 செலவிடப்பட்டிருந்த போதும், சந்தை நடாத்த பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக பம்பஹின்ன முற்சந்தி தொடக்கம் பம்பஹின்ன கும்பல்கம பாதையின் ஓரங்களில் வாராந்த சந்தை நடாத்தப்படுவதனால் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களுக்கு மழையினால் மற்றும் அதிக வாகன நெரிசலினால் அதிக கஷ்டங்களுக்கும் அபாயத்திற்கும் முகம் கொடுக்க நேரிட்டிருந்தது. | வாராந்த சந்தையை அபிவிருத்தி செய்து பயன்படுத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் பிரதேச சபை வலுவூட்டும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட ஏற்பாட்டிலிருந்து ரூபா 4,561,397 செலவில் மதில் இடப்பட்டு நிலத்தை தயார் செய்தல் மலசலகூட இரண்டு மாடியின் முதல் மாடியை நிர்மானித்தல் மற்றும் நீர் விணியோகம் பெறப்பட்டுள்ளன. 2018 ஆண்டு இச்சந்தையின் மீதி வேலைகளை பூர்த்தி செய்ய உள்ளூராட்சி அமைச்சிலிருந்த ஏற்பாடு பெறப்பட்ட பின்னர் வாராந்த சந்தையை வியாபாரிகளுக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்க நடலடிக்கை எடுக்கிறேன். |